1968 மார்ச் 27]

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : அதற்கான விவரம் என்னிடத்தில் இல்லே. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துச் சொல்லப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : லஞ்ச ஊழல் குற்றம் சாட்டப் பட்டு, மெய்ப்பிக்கப்பட்டவர்களின் மீது—டிஸ்மிஸ் செய்யப் படுதலோ அல்லது வேறு ஏதாவது கடும் தண்டனே அளிக்கப் படுதலோ அன்றி கட்டாய ஓய்வு என்ற முறையில் அவர்களே விட்டுவிடுவது சரியா? அந்த முறை நீடிக்கப்படலாமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : அதுபற்றி அரசு இதுவரை யோசிக்கவில்லே.' கனம் உறுப்பினர் சொல்வது சரிதாளு என்பது இனித்தான் யோசிக்கப்படும்.

திரு. டி. மார்டின் : லஞ்சக் குற்றங்களே போலீசார்கள் 'டிகாய்' Witness முறை வைத்துப் பிடிக்கிருர்கள். இது சரியல்ல. வாங்காதவர்கள்கூட இவர்கள் 'டிகாய்' முறையில் கொடுக்க முயற்சிக்கிறபோது சபலத்தில் ஏமாந்து மாட்டிக் கொள்கிருர்கள். இனிமேல் இந்த முறையைக் கையாளாமல் இருப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : மாண்புமிகு உறுப்பினர் டிராப் முறையைப்பற்றிச் சொல்கிருர்கள் என்று நினைக்கிறேன். முறைப்படி குற்றத்தை நிரூபிப்பதற்கான தடை யங்களேத்தான் புலனுய்கிருர்கள். அதுவும் போதாது, குற்றத்தை நிரூபிப்பதற்குத் தக்க ஆதாரம் வேண்டும் என்கிறபோது இந்த முறையையும் கையாள்கிருர்கள். இது வேண்டுமென்றே பிடிக்கப் பட்டது என்று வாதாடச் சந்தர்ப்பம் இருக்கிறது. நீதி மன்றத் திற்குப் போகவும் சந்தர்ப்பம் இருக்கிறது.

உள்ளாட்சித் துறை அமைச்சர் தேவகோட்டைக்கு வருகை

* 325 வினு.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 16—10—1967-ல் தேவகோட்டைக்கு விஜயம் செய்த போது மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு கருப்புக் கொடி காட்டப்பட்டதா?

(இ) எந்தக் கட்சியினர் கருப்புக் கொடி காட்டினர்?

(உ) அதற்கான காரணங்கள் யாவை?

(எ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : (அ) முதல் (எ) வரை—16—10—1967-ல் உள்ளாட்சித் துறை அமைச்சர் தேவகோட்டை சென்றிருந்தபோது, மற்றெரு கட்சியைச் சேர்ந்த தனிநபர் வீட்டில் பகல் உணவுக்கு ஏற்பாடாயிற்று. இந்த ஏற்பாடு, தலத்திலுள்ள சில தி.மு.க. உறுப்பினர்களுக்குப் பிடிக்கவில்லே. அமைச்சர் உணவுக்காக அந்தத் தனிநபர்

(மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை)

வீட்டிற்குச் சென்ற சமயம், ஓர் உறுப்பினர் கருப்புக் கொடி காட்டினர். அமைச்சர் சமாதானம் கூறிய பிறகு, அந்த உறுப்பினர்கள் அமைச்சருக்குக் கருப்புக் கொடி காட்டுவதை மேற்கொள்ளவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த உறுப்பினர்கள் அமைச்சர் அவர்கள் சமாதானம் சொல்லியும் போகவில்லை. அமைச்சர் ரெவின்யூ அதிகாரிகளை விட்டு சமாதானப்படுத்தச் சொன்ன போதே அவர்கள் சென்றார்கள் என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : எதனால் சமாதானம் அடைந்து சென்றார்கள் என்பது தெரியாது. அமைச்சர் அவர்கள் தானே நேரில் சமாதானம் சொன்னதான காரணத்தைக் கேட்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

அமைச்சர்களுக்கான நடைமுறை விதிகள் தொகுப்பு

* 326 வினா—திரு. ஆ. கு. சுப்பையா : } திரு. சோ. அழகர்சாமி : } மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லஞ்ச ஒழிப்புக் கமிட்டி (சந்தானம் கமிட்டி) செய்துள்ள சிபார்சுகளின் அடிப்படையில், அமைச்சர்கள் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுங்கு முறை விதிகள் தயாரிக்கும் நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது ?

(இ) அதன் விபரங்கள் யாவை ?

(உ) எப்போது முதற் கொண்டு அமலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) மத்திய அமைச்சர்களுக்கு வகுக்கப்பட்டுள்ள நடத்தை விதித் தொகுப்பைப் போன்று நமது மாநில அரசும், அமைச்சர்கள் நடத்தை விதித் தொகுப்பு ஒன்றை வகுத்துள்ளது.

(இ) இந்த விதித் தொகுப்பு 27—7—1965-ல் சட்டசபை முன்பும், 30—7—1965-ல் சட்டமன்றத்தின் முன்பும் வைக்கப் பட்டது. 11—8—1965-ம் தேதியுள்ள தமிழக அரசிதழிலும் இவ் விதித் தொகுப்பு வெளியிடப்பட்டது. இதன் நகல் ஒன்று @ சபை முன் வைக்கப்பட்டுள்ளது.

(உ) அமைச்சர்கள் நடத்தை விதித் தொகுப்பு 10—5—1965 முதல் செயலுக்கு வந்தது.

திரு. கே. விநாயகம் : அமைச்சர்கள் நடத்தை விதித் தொகுப்பு —கோட் ஆப் காண்டெக்ட் ஃபார் மினிஸ்டர்ஸ்—நேற்று காலையில் மேசைமீது வைக்கப்பட்டது. நேற்று அதைப் படிக்கிற சூழ்நிலை இல்லை. அதில் அமைச்சர்கள் எந்த எந்த முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்று வகுக்கப்பட்டிருக்கிறதோ அதுபோல நடந்து கொள்கிறார்களா என்று கேட்கிறேன்.

---

* 369-371-ம் பக்கங்களில் III-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.